**வென்னப்புவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வென்னப்புவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வென்னப்புவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறை களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் அவதானிப்புக்களைத் தவிர்த்து முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 12 ந்ரமாண வேலைகளின் பெறுமதியான ரூபா 5,590,021 தொகை மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதாக அறிய தருகிறேன் | நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட செலவினத்தை மூலதனமாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 702,515 பெறுமதியான 09 காணிகளும் பெறுமதி குறிப்பிடப்படாத 05 காணிகளும் மானியமாக கிடைத்திருந்த காணியொன்றும் பதிவேடுகளுக்கு உட்படுத்தா திருந்ததுடன் பெறுமதி இனங் காணப்பட்டு சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டில் சொத்துக் கணக்குகளுக்கு சீராக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு தொடர்பாக வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 445,360 தொகையான ஆதன வாடகை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான வருமானத்தை நேரடியாக வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையினால் காணி உரித்துக் கொள்வதற்கும் அனுமதிப் பத்திரக் கட்டணங்களைப் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள 31 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான வழக்குகள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பின் கீழ் வெளிப்படுத்துவதாக அறியத்தருகிறேன். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபைக்கு நன்கொடை உறுதியாக கிடைத்திருந்த காணி பகுதிகளிலும் காணி துண்டு பிரிப்பதற்குரிய ஏல விற்பனை கம்பனியால் கையளிக்கப்பட்டிருந்த 02 பொதுக்காணிப் பங்குகளில் சந்தைப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில இவ்வாறான காணி தொடர்பாக குறைந்தது தற்காலிக மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு அல்லது கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 02 இலங்கை வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 808,112 ஆன மீதியொன்று தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மாத்திரம் இடம் பெற்றிருந்ததுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுமானத்தை சபை நிதியத்திற்கு சீராக்கி கணக்கு அறிக்கைகளில் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் வீதவரி பட்டியலிடலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 18,162,505 தொகையில் ரூபா 7,353,799 ஆன சில ஏனைய வருமான வகைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | இவ்வருமானத் தலைப்புக்களை வெவ்வேறாக காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | வருமானத் தலைப்புக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிருவகிக்கப்படுகின்ற 15 முன்பள்ளி பாடசாலைகளுக்குரிய 750 பிள்ளைகளிடமிருந்து 2021 திசெம்பர் மாதம் வரை சபையின் பெயர் குறிப்பிடப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மூலம் பணம் சேகரிக்கப்பட்டு வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 6,695,197 தொகையாக இருந்தது. சபையின் அங்கீகாரமின்றி சபையின் பெயர் பொறிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த | கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றை நிறுவுவதற்கு | வருமானங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் செலவினங்கள் தொடர்பான கணக்குகளை சபைக்குச் |

| | |
|---|---|
| பற்றுச்சீட்டுக்களிலிருந்து கிடைத்த பணம் முன்பள்ளி பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்புரையின் பிரகாரம் முன்பள்ளி பாடசாலையின் பெயரில் திறந்து இருந்த வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களின் போது செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினங்களுக்குரிய கணக்குகள் சபைக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அறிவுறுத்தல் பத்திரத்தின் பிரகாரமும் கணக்குகள் சபைக்கு சமர்ப்பிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்கணக்குகள் எந்தவொரு கணக்காய்விற்கும் உட்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபையால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து ரூபா 13,698,856 தொகை முன்பள்ளி பாடசாலைக்காக செலவிடப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். சமர்ப்பித்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 80,947,611 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 94,011,251 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியார் துறைக்குரிய 3949 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 8,791,104 ஆன வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை அதில் 794 அலகுகளிலிருந்து ரூபா 2,332,227 அறவிடப்பட்டு இருந்ததுடன் 208 அலகுகளிலிருந்து ரூபா 508,955 தொகையை ஆளுனரின் அனுமதியுடன் பதிவழிக்கப்பட்டிருந்தது.<br>**(ஆ) வியாபார வரி**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 39 அலகுகளிலிருந்து ரூபா 119,400 ஆன வியாபார வரி அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. 2022 ஆகஸ்ட் 31 ஆம் வரை அதில் 01 அலகில் இருந்து ரூபா 3,000 அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மீதியான 38 அலகுகளிலிருந்து ரூபா 116,400 அறவிடக் கூடியதாக இருந்தது. | வீதவரி உட்பட நிலுவை வருமானம் நடமாடும் நிகழ்ச்சித் திட்டமொன்றைச் செயற்படுத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | நிலுவை வருமானங்களை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) கடை வாடகை<br><br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 165 கடைகளிலிருந்து ரூபா 4,328,150 ஆன நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை அதில் 76 கடைகளிலிருந்து ரூபா 1,802,015 அறவிடப்பட்டு இருந்ததுடன் 16 கடைகளின் ரூபா 1,021,895 தொகை ஆளுனரின் அனுமதியுடன் பதிவழிக்கப்பட்டிருந்தது.<br><br>(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 56 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 2,731,161 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை அதில் 12 அலகுகளிலிருந்து ரூபா 851,918 அறவிடப்பட்டுஇருந்ததுடன் 24 அலகுகளின் ரூபா 421,878 தொகையை ஆளுனரின் அனுமதியுடன் பதிவழிக்கப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |